දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112694033 , 0112675280
Telephone ) 0112675449

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax ) 0112692913

විද්‍යුත් තැපැල ) postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ් අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
website )

මගේ අංකය )
எனது இல ) MH/AD/01/06/DDG(ET&R)/2025
My No. )

ඔබේ අංකය )
உமது இல )
Your No. )

දිනය )
திகதி ) 2025. 07. 13
Date )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

# සෞඛ්‍ය හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය
# சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு
# Ministry of Health & Mass Media

பொது சுற்றறிக்கை கடித இலக்கம்: **02 – 54/2025**

மாகாண சுகாதார செயலாளர்கள்,
பிரதிப் பணிப்பாளர் நாயகங்கள் - தேசிய வைத்தியசாலை (கொழும்பு, கண்டி, காலி)
மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
போதனா வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள், விஷேட திட்டப் பணிப்பாளர்கள்,
மத்திய அமைச்சின் கீழுள்ள சகல வைத்தியசாலைகளின் மற்றும் நிறுவனங்களின் தலைவர்கள் அனைவருக்கும்,

**பிரதிப்பணிப்பாளர் நாயகம் (கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி) பதவி**
**சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு**

இந்த அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரி 2021.11.02 ஆம் திகதி வெளியிடப்பட்ட 01 – 21/2021 எனும் இலக்க பொது சுற்றறிக்கை இத்தால் இரத்துச் செய்யப்படுவதுடன், 2014.10.11 ஆம் திகதிய 1883/17 எனும் இலக்க இலங்கை சுகாதார சேவையின் மருத்துவ சேவை பிரமாணக் குறிப்பு மற்றும் அதனுடன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் பின்னிணைப்பு V இல் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி பதவிக்கு உரிய தகைமைகளைக் கொண்டுள்ள **இலங்கை மருத்துவ சேவையில் சிரேஷ்ட மருத்துவ நிர்வாக தரத்தின் மருத்துவ அலுவலர்கள் மற்றும் பல் அறுவை சிகிச்சை மருத்துவ அலுவலர்களிடமிருந்து** மீண்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. உரிய விண்ணப்பப்படிவத்தை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய தயாரித்து செயலாளர், சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு, "சுவசிறிபாய" 385, சங்கைக்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10 எனும் முகவரிக்கு 2025.07. 28 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு **பதிவுத்தபாலில் மாத்திரம்** அனுப்பிவைத்தல் வேண்டும்.

03. தமது விண்ணப்பத்தை மீளப் பெற விரும்பும் விண்ணப்பதாரிகள் விண்ணப்ப முடிவு திகதியிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் எனக்கு அறிவிப்பதனூடாக மீளப் பெறுவதற்கு அனுமதிக்கப்படுவர்.

04. கடமை விபரம்:

I. ஆரோக்கியத்திற்கான மனித வள கொள்கைகளை மேம்படுத்தல் மற்றும் திருத்தம் செய்தல் (தாதி, நிறைவுகாண், துணை மருத்துவ, தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பம் தவிர்ந்த பதவியணியினர்)
II. சுகாதார அமைச்சின் சகல பதவியணியினருக்கும் சேவை பயிற்சி அளித்தல்
III. கொள்கை வகுத்தல் மற்றும் தேசிய சுகாதார ஆராய்ச்சி வழிகாட்டுதல்களை திருத்தல்
IV. பணிப்பாளர் (பயிற்சி), பணிப்பாளர் (ஆராய்ச்சி), பணிப்பாளர் (தேசிய சுகாதார நிறுவனம்), பணிப்பாளர் (மருத்துவ ஆராய்ச்சி நிலையம்) மற்றும் பணிப்பாளர் (தாதியர் கல்வி) ஆகியோரை கண்காணித்தல் மற்றும் அவர்களுடன் இணைந்து செயற்படுதல்

V. கற்பித்தல் கற்கைநெறிகள், பொருட்கள் மற்றும் கற்பித்தல் முறைகள் மேம்படுத்தல் மற்றும் மீள் திருத்தம் செய்தல்

VI. தேசிய மற்றும் சர்வதேச கல்வி மற்றும் தொழில்முறை அமைப்புகளை ஒருங்கிணைத்தல் மற்றும் பிரதிநிதித்துவப்படுத்தல்

VII. சுகாதார துறை தவிர வேறு நிறுவனங்களுக்கு தொழில்நுட்ப ஒத்துழைப்புகளை வழங்குதல்

VIII. அனைத்து ஆரம்ப மற்றும் பட்டப்பின்படிப்பு ஆரம்ப பயிற்சி திட்டங்களுக்கான கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களை தயாரித்தல்

ஆரம்ப பயிற்சி நெறி - தாதி, மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர், மருந்தாளர், கதிரியலாளர், பௌதீக சிகிச்சையாளர், தொழில்சார் சிகிச்சையாளர், வைத்தியசாலை மற்றும் குடும்பநல உத்தியோகத்தர்கள், பொது சுகாதார பரிசோதகர், பூச்சியியல் உதவியாளர்கள், பொது சுகாதார ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள், மூளை மின்னியக்கப் பதிவாளர், இதயத்துடிப்பு பதிவாளர்கள், கண் தொழில்நுட்பவியலாளர்கள், எலும்பியல் நிலைய தொழில்நுட்பவியலாளர்கள், பொது சுகாதார கள உதவியாளர்கள், மருந்துக் கலவையாளர்கள், பல் தொழில்நுட்பவியலாளர்கள், பாடசாலை பற்சிகிச்சையாளர்கள், செவிப்புல தொழில்நுட்பவியலாளர்கள், பரிசாரகர்கள், வெளிநாட்டு மாணவர்களை உள்நாட்டு நிறுவனங்களிலும், உள்நாட்டு மாணவர்களை வெளிநாட்டு நிறுவனங்களிலும் பயிற்றுவித்தல் மற்றும் இணைத்தல் மற்றும் தேவைக்கேற்ப பிற கற்கை நெறிகள்

பட்டப்பின்படிப்பு தாதியர் கற்கை நெறி – சிறுவர் மருத்துவ பயிற்சி, தீவிர சிகிச்சை பிரிவு பயிற்சி, சத்திரசிகிச்சைக்கூட பயிற்சி, உளநல பயிற்சி, முகாமைத்துவ மற்றும் மேற்பார்வை பயிற்சி, கற்பித்தல் மற்றும் கண்காணிப்பு பயிற்சி, எலும்பியல் பயிற்சி, தொழில்பராமரிப்பு பிரிவுகளில் பயிற்சி, ஊட்டச்சத்து பயிற்சி, அவசர சிகிச்சை தொடர்பான தாதியர் பயிற்சி

IX. பயிற்சி நிறுவனங்களுக்கிடையில் மாணவர்களின் இடமாற்ற நடவடிக்கைகள்

X. மேலே குறிப்பிட்டுள்ள சகல கற்கை நெறிகளையும் நடாத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல்

XI. பிரதிப் பணிப்பாளர் நாயகம் (கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி ) இன் கீழுள்ள மாகாண/ பிரதேச/ பொது சுகாதார மருத்துவிச்சி விடயம் தொடர்பான பயிற்சி நிலையங்களை மேம்படுத்தல், விரிவுபடுத்தல், கண்காணித்தல், தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் அப்பயிற்சி நிறுவனங்களுக்கு மாணவர்களை இணைத்தல்.

XII. கற்கை நெறிகள் (கற்கை நெறி மேம்பாடு மற்றும் திருத்தம்), கற்பித்தல் முறை மற்றும் கற்பித்தல் பொருட்களுக்கான இயல்பு மற்றும் தர நிலைகளை கண்காணித்தல்

XIII. சேவை முகாமைத்துவத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களை (ஏனைய பிரதிப்பணிப்பாளர் நாயகங்கள், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் போன்ற உத்தியோகத்தர்கள்) மற்றும் அனைத்து பிரிவுகளிலும் உள்ள சுகாதார பதவியணியினரின் கல்வி மற்றும் பயிற்சி வசதிகளுக்கு பொறுப்பான உத்தியோகத்தர்களுடன் ஒருங்கிணைத்தல்

XIV. சுகாதார அமைப்புகளின் ஆராய்ச்சி நடவடிக்கைகளை திட்டமிடல், மேம்படுத்தல், கண்காணித்தல் மற்றும் செயற்படுத்தல்

XV. உத்தியோகபூர்வமாக தேசிய சுகாதார ஆராய்ச்சி சபையின் செயலாளராக பணியாற்றுதல்

XVI. சுகாதார அமைச்சின் கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி பிரிவை கண்காணித்தல் மற்றும் நிர்வாகம் தொடர்பான பொறுப்புகளை வகித்தல்

XVII. கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி பிரிவில் பணிபுரியும் ஊழியர்களின் தொழில் வளர்ச்சியை உறுதிப்படுத்தல்

XVIII. பட்டப்பின் படிப்பு பயிற்சி திட்டங்களை செயற்படுத்தல் மற்றும் சுகாதார அமைச்சின் சகல பிரிவினருக்கும் கல்வி / சேவை பயிற்சி திட்டங்களை தொடர்ச்சியாக செயற்படுத்தல்

XIX. சகல மருத்துவ அலுவலர்கள் மற்றும் மாகாண/ பிராந்திய சுகாதார அதிகாரிகளுக்கு தேசிய தொடர்ச்சியான தொழில்முறை அபிவிருத்தி திட்டங்களை வகுத்தல் மற்றும் கண்காணித்தல் மற்றும் செயற்படுத்தல்

XX. மருத்துவ மற்றும் பட்டப்பின்படிப்பு பயிற்சிகள் தரமானதாகவும் பயனுள்ளதாகவும் ஒருங்கிணைப்பதற்கும் மற்றும் சுகாதார ஊழியர்களுக்காக உயர் தரத்தில் பயிற்சிகள் நிறுவுவதற்கு மருத்துவ கல்லூரிகளில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில், பட்டப்பின்படிப்பு மருத்துவ விஞ்ஞான பட்ட நிறுவனத்தில், தேசிய அறிவியல் நிறுவனத்தில் நடாத்தும் சகல கூட்டங்களிலும் அமைச்சினை பிரதிநிதித்துவப்படுத்தல்

XXI. பிற நாடுகளில் விஷேடமாக தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்தில் மற்றும் சார்க் நாடுகளில் சுகாதார ஊழியர்களுக்கான கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்

XXII. சுகாதார செயலாளரினால் அல்லது சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் அவ்வப்போது வழங்கப்படும் கடமைகளை நிறைவேற்றல்

05. சேவை நியதிகளும் நிபந்தனைகளும்:-

அ). இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்துடன் கூடியதும் ஆகும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறைக் கோவையின் அத்தியாயம் VIII இன் 118 ஆவது பிரிவின்படி 01 வருட காலத்திற்கு தகுதிகாண் அடிப்படையில் நியமிக்கப்படுவார். தகுதிகாண் காலத்தின் போது அல்லது தகுதிகாண் காலத்தின் முடிவில், தெரிவுசெய்யப்பட்ட உத்தியோகத்தர் ஏதேனும் காரணத்திற்காக அந்தப் பதவியை வகிக்கத் தகுதியற்றவர் எனக் கண்டறியப்பட்டால், அந்த உத்தியோகத்தர் அவர் முன்பு வகித்த அதே பதவிக்கு மீண்டும் திருப்பி அனுப்பப்படுவார்.

ஆ). இப்பதவிக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தருக்கு தனியார் மருத்துவ பணியில் ஈடுபட உரிமை இல்லை.

இ). இலக்கம் 2410/09 எனும் 2024.11.17 ஆம் திகதிய இலங்கை சுகாதார சேவையின் மருத்துவ சேவை பிரமாணக் குறிப்பின் 07 வது திருத்தத்தின் 11.1.2.3 இன் பிரிவு VIII பிரகாரம், இப்பதவி இறுதி சேவை நிலைக்குரிய பதவி என்பதால், இடமாற்றங்களுக்கு உட்பட மாட்டாது.

ஈ). அனைத்து நியமனங்களும் எதிர்கால திகதியில் இருந்து அமுலுக்கு வரும். ஏற்கனவே இப்பதவியில் பதில் கடமையாற்றும் அல்லது கடமையை நிறைவேற்றும் அல்லது கடமைகளை கவனிக்கும் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் அந்த உத்தியோகத்தருக்கு புதிய நியமனத்தை முன் திகதியிடுமாறு கோருவதற்கு எவ்வித உரிமையும் இல்லை.

06. சம்பளத் திட்டம்

அ) இப்பதவிக்கு அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இன் பிரகாரம் SL – 03 – 2025 சம்பள பிரிவின் I· படி நிலை (ரூபா 156,000 – 12 x 4850 -214,200 ) உரித்தாகும்.

ஆ) பட்டப்பின்பட்ட தகைமைகளைக்கொண்ட மருத்துவ நிர்வாக தர அலுவலர்களுக்கு மாதாந்தம் ரூபா 6000/= வீதம் மருத்துவ நிருவாக படிக் கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

இ) இப்பதவிக்கு விஷேட மருத்துவ நிபுணர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டால், அவர் விஷேட நிபுணத்துவ மருத்துவ தர அலுவலருக்கான சம்பளம் மற்றும் படிக் கொடுப்பனவையும் பெறுவதற்கான உரிமை உண்டு.

07. வயதெல்லை:

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி ஏற்கனவே அரச ஊழியர் என்பதால் வயதெல்லை ஏற்புடையதாகாது.

08. தகைமைகள்

I. இலக்கம் 2410/09 எனும் 2024.11.17 ஆம் திகதிய அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கை சுகாதார சேவையின் மருத்துவ சேவை பிரமாணக் குறிப்பின் 07 வது திருத்தத்தின் 11.1.2.3 (அ) இன்படி, மருத்துவ சேவை பிரமாணக் குறிப்பின் பின்னிணைப்பு II இல் பட்டியலிடப்பட்டுள்ள முதுமாணி (MSc) (மருத்துவ நிர்வாகம்/ சமூக மருத்துவம்) பட்டத்தைப் பெற்றுள்ள சிரேஷ்ட மருத்துவ நிர்வாகத் தரத்தின் மருத்துவ உத்தியோகத்தர் அல்லது பல் சத்திர சிகிச்சை மருத்துவர் அல்லது விஷேட மருத்துவ நிபுணராக இருத்தல்.
(2007.04.16 ஆம் திகதிய 1493/3 எனும் இலக்க வர்த்தமானி அறிவித்தல் நடைமுறைக்கு வரும் திகதியில் சிரேஷ்ட மருத்துவ நிர்வாக தர பதவியொன்றில் பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவருக்கு இந்த கட்டாயத் தகைமை பொருந்தாது.)

II. அரச சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/2020 அல்லது அதன் துணை சுற்றறிக்கைகளின் விதிமுறைகளின்படி ஒழுக்காற்றுத் தண்டனைகள் பெற்றிருக்கக்கூடாது.

III. அனைத்து தகைமைகளும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினத்திற்கு பரிசீலிக்கப்படும்.

09. நேர்முகத் தேர்வில் புள்ளி வழங்கும் முறை:-

| | அளவுகோல்கள் | | புள்ளிகள் |
|---|---|---|---|
| I. | சேவைக்காலம்:<br>(சிரேஷ்ட மருத்துவ நிர்வாகத் தரத்தில் தொடர்ச்சியான சேவைக்காலத்திற்கு ஒரு வருடத்திற்கும் 05 புள்ளிகள் வீதம் அதிகூடிய புள்ளிகள் 50)<br>“தொடர்ச்சியான சேவைக்காலத்தை கணக்கிடும் போது ஒரு வருடத்திற்குக் குறைந்த காலத்திற்கு காலாண்டு என்ற விகிதாசாரத்திற்கு ஏற்ப புள்ளிகள் கணக்கெடுக்கப்படும்.” | | மொத்த புள்ளி 50 |
| II. | பட்டப்பின்பட்ட தகைமைகள்<br>இலங்கை சுகாதார சேவையின் மருத்துவ சேவை பிரமாணக் குறிப்பின் 07 வது திருத்தத்தின் 11.1.2.3 இல் (அ) II இன் விதிகள் மற்றும் இடைக்கால விதிகளின்படி பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும்.<br>மருத்துவ கலாநிதிப்பட்டம் – 15 புள்ளிகள்<br>(மருத்துவ நிருவாகம்/சமூக மருத்துவம்)<br>விஞ்ஞான முதுமாணிப்பட்டம் – 10 புள்ளிகள்<br>(மருத்துவ நிருவாகம்/ சமூக மருத்துவம்)<br>“குறிப்பு: இவற்றில் பெறப்பட்ட அதிகூடிய தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.” | | மொத்த புள்ளி 15 |
| III. | மேலதிக தகைமைகள் | | மொத்த புள்ளி 25 |
| | 01. பதவிக்கு உரித்தான விடயத்துறையில் செய்யப்பட்ட விஷேட திட்டங்கள்<br>(ஒரு செயற்திட்டத்திற்கு 02 புள்ளிகள் வீதம் திட்டங்கள் 05 இற்கு அதிகூடிய புள்ளி 10)<br>(அ) திட்ட மதிப்பீட்டின் போது இணைப்பு 1 இல் குறிப்பிட்டுள்ள அளவுகோள்கள் அடிப்படையாகக் கொள்ளப்படும்.<br>(ஆ). விண்ணப்பத்துடன் திட்ட அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், அவ்வறிக்கையில் உள்வாங்கப்பட்ட திட்டங்களுக்கு மாத்திரமே நேர்முகப்பரீட்சையின் போது புள்ளிகள் வழங்குவது தொடர்பாக பரிசீலிக்கப்படும்.<br>(இ). விஷேட திட்டங்களுக்காக புள்ளிகள் வழங்கும் போது இணைப்பு 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளித் திட்டம் பயன்படுத்தப்படும்.<br>“குறிப்பு – விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் நிறைவு செய்யப்பட்ட திட்டங்களாக இருத்தல் வேண்டும்.” | 10 புள்ளிகள் | |
| | 02. பதவிக்குரிய விடயத்துறையின் கீழ் வெளியிடப்பட்டுள்ள ஆய்வுகள்/வெளியீடுகள்<br>(ஒரு ஆய்வுகள்/வெளியீடுகளுக்கு 02 புள்ளிகள் வீதம் ஆய்வுகள்/வெளியீடுகள் 05 இற்கு அதிகூடிய புள்ளிகள் 10)<br>(அ).ஆய்வுகள்/ வெளியீடுகளை மதிப்பீடு செய்யும் போது இணைப்பு 3 இல் குறிப்பிட்டுள்ள அளவுகோள்கள் அடிப்படையாகக் கொள்ளப்படும். | 10 புள்ளிகள் | |

| | | | |
|---|---|---|---|
| | (ஆ). விண்ணப்பத்துடன் ஆய்வுகள்/ வெளியீடுகளின் பட்டியலை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், அந்த பட்டியலில் உள்ளிடப்பட்டுள்ள ஆய்வுகள்/ வெளியீடுகளுக்கு மட்டுமே நேர்முகப்பரீட்சையில் புள்ளிகள் வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.<br><br>(இ). ஆய்வுகள்/ வெளியீடுகளுக்கு புள்ளிகள் வழங்கும் போது இணைப்பு 4 இல் குறிப்பிட்டுள்ள அளவுகோள்கள் அடிப்படையாகக் கொள்ளப்படும்.<br><br>"குறிப்பு – சிரேஷ்ட நிர்வாகத் தரத்திற்கு நியமனம் பெற்றதன் பின்னர் செய்யப்பட்ட ஆய்வுகள்/ வெளியீடுகளாக இருத்தல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் நிறைவு செய்யப்பட்ட திட்டங்களாக இருக்க வேண்டும்." | | |
| | 03. சபை சான்றிதழ்<br><br>(மருத்துவ நிருவாகம்/சமூக மருத்துவம்) | 05 புள்ளிகள் | |
| IV. | நேர்முகப்பரீட்சை<br>(திறமை, தலைமைத்துவம், மனப்பாங்கு, ஆளுமை மற்றும் தொடர்பாடல் திறமைகளுக்கு) | | மொத்த புள்ளி 10 |
| | மொத்த புள்ளிகள் | | 100 |

10. விண்ணப்ப முடிவுத்திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியவாறு நிறுவனத் தலைவர்கள் அல்லது பன்முகப்படுத்தப்பட்ட பிரிவுகள்/ விஷேடத் திட்ட தலைவர்களின் ஊடாக அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

11. இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2014.10.11 ஆம் திகதிய 1883/17 எனும் அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட இலங்கை சுகாதார சேவையின் மருத்துவ சேவை பிரமாணக் குறிப்பு மற்றும் அவ்வப்போது அதில் செய்யப்பட்ட திருத்தங்கள், அரச சேவையின் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு தொடர்பான அரச சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகள் கோவை பாகம் I இன் பொது நிபந்தனைகள் மற்றும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவை ஆகியவற்றின் மீது உங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

12. இந்த அறிவித்தலில் சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளுக்கிடையே ஏதாவது முரண்பாடுகள் அல்லது வேறுபாடுகள் இருந்தால், அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியிலான அறிவித்தல் சரியானதாகக் கொள்ளப்படும்.

13. இப்பதவிக்கு நியமித்தல் தொடர்பாக இந்த சுற்றிக்கையில் உள்ளடக்கப்பட்ட அல்லது உள்ளடக்கப்படாத எந்தவொரு விடயம் தொடர்பாக ஏதேனும் பிரச்சனைகள் எழுந்தால், அது தொடர்பாக அரச சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானம் ஆகும்.

அரச சேவை ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் குழுவின் நியதிகளுக்கு அமைய,

Dr. Anil Jasinghe
Secretary
Ministry of Health & Mass Media
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10

விஷேட மருத்துவர் அனில் ஜாசிங்க
செயலாளர்
சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு